ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை–திரு.எச்.எஸ். ஸ்ரீகாந்த். இ.ஆ.ப..,

ந.க.எண்.249/2024/எப்1 நாள்.23.08.2024

பொருள் – மனைப் பிரிவு – ஓசூர் மாநகராட்சி– மத்திகிரி கிராமம் சர்வே 721/1B4C1, 721/55, 721/56 &721/57–ல் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி வழங்குதல்–தொடர்பாக.

பார்வை – 1. உறுப்பினர், செயலர், ஓசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஓசூர் கடிதம் ந.க.எண் OKMLZGRJ/2023/TCP நாள்.07.09.2023
2. தானப்பத்திரம் எண்.8302/2023 நாள்.17.08.2023
3. மனுதாரரின் விண்ணப்பம் நாள்.05.01.2024
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை நகஎண்.12843/2022/டிபி–2 நாள். 20.10.2022
5. மாமன்ற தீர்மானம் எண். 266 நாள். 31.07.2024

* * * *

உத்திரவு :

ஓசூர் மாநகராட்சி மத்திகிரி கிராமம் சர்வே 721/1B4C1, 721/55, 721/56 &721/57–ல் 2801.00 ச.மீ பரப்புள்ள இடத்தை மனைப்பிரிவாக அங்கீகரிக்க கோரி மனுதாரரின் விண்ணப்பத்தில் கோரப்பட்டதை தொடர்ந்து பார்வை 1ல் காணும் உறுப்பினர் செயலர், ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம் கடிதத்தில் உத்தேச குடியிருப்பு மனை பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ஒ.பு.ந.வ.கு/(கி.மா) SWP எண்.130/2023 என எண்ணிடப்பட்டு தொழிற்நுட்ப அனுமதியும் ம.வ/தி.அ/ஒ.பு.ந.வ.கு/(கி.மா) SWP எண்.47/2023 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 2ல் காணும் தானப்பத்திரம் எண்.8302/2023 நாள்.17.08.2023 மூலம் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கு பார்வை5ல் காணும் மாநகர மேயர் அவர்களின் முன் அனுமதியில் பின்னேற்பு வழங்கப்பட்டுள்ளது. பார்வை 1–ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும், மனுதாரரின் மனைப் பிரிவிற்கு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்:–

பார்வை 4ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி வரிசை எண்.9ல் மனுதாரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் வடிகால் வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள்

அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/மனைப்பிரிவு உரிமையாளரைச்சாரும். மேலும், வரிசை எண்.10ல் பராமரிப்பு பணிகளுக்கான திரும்ப செலுத்தக்கூடிய வைப்புத்தொகை ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் மனுதாரர் செலுத்தப்பட வேண்டும்.

அதன்படி தங்களால் ரூ.1.00 இலட்சம் இரசீதுஎண்.153/01/2/24-25/0002778 நாள்.20.08.2024ல் வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 4ல் காணும் கடிதத்தில் வரிசை எண்.13ல் தெரிவித்துள்ளவாறு பராமரிப்புகாலத்தில் பராமரிப்புபணிகளை மனைப்பிரிவு உரிமையாளர் மேற்கொள்ள தவறினால் மேற்காணும் பணிகள் மாநகராட்சி வாயிலாக செய்யப்பட்டு அதற்கான தொகை தங்களிடமிருந்து பெறப்பட்ட வைப்பு தொகையிலிருந்து ஈடுசெய்யப்படும் பராமரிப்பு பணிகளுக்கான தொகை தாங்கள் செலுத்தியுள்ள தொகைக்கு அதிகமான தொகைக்கு மாநகராட்சியால் பராமரிப்புபணிகள் மேற்கொண்டிருந்தால் பராமரிப்பு பணிகளுக்கான மீதி தொகையை தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

23.8.24

ஆணையாளருக்காக
ஓசூர் மாநகராட்சி

23.8.24

பெறுநர்:-

திருமதி.சிரியாலா மற்றும் திருமதி.எம். விஜயரஞ்சினி ,
க.எண்.2-26-1,
மிடுகரப்பள்ளி,
மத்திகிரி-635110

நகல்- வருவாய் ஆய்வர், ஓசூர் மாநகராட்சி – மேற்படி மனைப் பிரிவிற்கு உரிய காலியிட வரி நிர்ணயம் செய்து அறிக்கை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.